**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

# மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

# சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

**Credit No. 5792-LK**

**Project ID: 156021**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை (REoL)

# தனிப்பட்ட ஆலோசகர்கள் பணியமர்த்தல் - சிவில் பொறியியலாளர்

திட்டப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் முழு நேர அடிப்படையின் கீழ் சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (ESCAMP) திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) சிவில் பொறியியலாளர் திறன் கொண்ட தனிப்பட்ட ஆலோசகர்களை பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ESCAMP இன் திட்ட பலன்கள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம், வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கீழ்ப்பட்டு வழங்கல் மற்றும் கட்டுமானத்தை பூர்த்திசெய்ய மற்றும் /அல்லது குறிப்பிட்ட கட்டிட வசதிகளின் உட்கட்டமைப்பை புனர்நிர்மாணித்தல் தனிப்பட்ட ஆலோசகரின் முக்கிய பொறுப்பாக உள்ளது.
குறிப்பிட்ட ஆலோசகர் குறைந்தபட்சம் பின்வரும் தகைமைகள் மற்றும் தேவைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

## 1 சிவில் பொறியியலாளர் - பதவி 01

**வேலை விபரம்:**

a. நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் தேவையைப் பொறுத்து கட்டமைப்பின் விரிவான வடிவமைப்புகளை மேற்கொள்ளல்
b. தேவைப்படின், விலைமனு ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் விலைமனு ஆவணங்களுக்கு தொழில்நுட்ப உள்ளடக்கங்களை வழங்கல் மற்றும் ஆகுசெலவு மதிப்பீடு, பொறியியல் வரைபடங்கள், தொகைகளின் விலை விவரப்பட்டியலை தயாரித்தல்
c. கட்டுமான மேற்பார்வை, ஒப்பந்த நிர்வாகம் மற்றும் முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் சிவில் வேலை ஒப்பந்தங்களை அறிக்கையிடல்
d. சிவில் கட்டுமானம் தொடர்புடைய பெறுகை செயல்முறைக்கான ESCAMP திட்டத்திற்கு உதவுதல்
e. ஏனைய ESCAMP பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு உதவுதல்
f. அனைத்து ESCAMP உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்பார்வையிடல்
g. ESCAMP - திட்டப் பணிப்பாளர் மூலம் ஒப்படைக்கப்படும் தொடர்புடைய வேறு எந்த வேலையும்

**தகைமைகள் மற்றும் அனுபவங்கள்**

a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் இளநிலைப் பட்டம் அல்லது அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனம் ஒன்றில் நிகரான கல்வித் தகைமை
மற்றும்
b. விசேடமாக கட்டிடக் கட்டுமானத்துடன் சிவில் பொறியியல் துறையில் கட்டுமான மேற்பார்வை மற்றும் வடிவமைப்பில் குறைந்தது 08 ஆண்டுகள் அனுபவம்
c. எந்தவொரு வெளிநாட்டு நிதித் திட்டத்துடன் தொடர்புடைய பெறுகைகள் மற்றும் பொது பெறுகைகளில் அனுபவம் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வேதனம்:** தகைமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித்தீர்மானிக்கலாம்.

**தேர்ந்தெடுப்பதற்கான வரைகூறு:** அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை. வெளிநாட்டு நிதித் திட்டத்தில் பணிபுரிந்த அனுபவம் கூடுதல் அனுகூலமாகும்.

ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரச ஒழுங்குவிதிகள் மற்றும் பெறுகை செயல்முறைகளில் பரிச்சயம் மற்றும் கணனி அறிவு கட்டாயம் மற்றும் அவசியமான முன்நிபந்தனைகளாகும். நீடிப்பதற்கான வாய்ப்புடன் ஆரம்ப ஒப்பந்தக் காலம் ஓர் ஆண்டாகும்.

உலக வங்கியின் வழிகாட்டல் நடைமுறைகளுடன் தகைமை மற்றும் அனுபவம் அடிப்படையில் தனிப்பட்டவர்கள் தேர்வு செய்யப்படுவர்: தனிப்பட்ட ஆலோசகர்களின் தேர்வுக்காக உலக வங்கி கடன்பெறுனர் மூலம் மானியங்கள் மற்றும் IDA பற்றுகள் மற்றும் IBRD கடன்களின் கீழ் ஆலோசகர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தல் இடம்பெறும்.

ஆலோசனை சேவைகளுக்கான நிபந்தனை குறிப்புகள் (TOR) தொடர்பான மேலதிக விபரங்கள் www.escamp.lk என்ற இணையத்தளத்தில் கிடைக்கும். ஆர்வமுடைய தனிப்பட்டவர்கள் கீழுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் மேலதிக விபரங்களை பெற முடியும்.

**விண்ணப்ப நடைமுறை:**

இந்த நிலைக்காக நிபந்தனைக் குறிப்புகளின்படி ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் சுயவிபரத்துடன் இந்த சேவையில் செயலாற்ற தமக்கு தகுதியிருப்பதை விளக்கும் தவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும் (இதே போன்ற பணிகள், இதே சூழலிலான அனுபவம், இருக்கும் பொருத்தமான திறன்கள், முதலியவற்றை விபரிக்குக). அரசு/பொதுத் துறைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத்தின் தொடர்புடைய தலைவர்கள் மூலமே விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் கீழே வழங்கப்பட்டிருக்கும் 26 நவம்பர் 2018இல் இருந்து பொது வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 13.00 மணிக்கு இடையே மேலதிக விபரம் மற்றும் வினவல்களை பெறலாம். அனைத்து விண்ணப்பங்களும் திட்டப் பணிப்பாளர்- ESCAMP என்ற பெயரில் பின்வரும் முகவரிக்கு 07 டிசம்பர் 2018 அன்று அல்லது அதற்கு முன்னர் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் குறித்த பதவியின் பெயரை அச்சு எழுத்துக்களில் தெளிவாக குறிப்பிட்டு பதிவுத் தபால் ஊடே சமர்ப்பித்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்**
**“சம்பத்பாயா”, இலக்கம் 82, ரஜமல்மாவத்தை வீதி, பத்தரமுல்லை.**
**தொலைபேசி: 0094-112-888428 தொலைநகல்: 0094-112-888577**
**இணையதளம்: www.escamp.lk**

24 நவம்பர் 2018